**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 51/2022 (C/W OS. 268/2022

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் நாள் புதன் கிழமை DW2 ன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 22.04.2026 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | திருமாவளவன் (DW2) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு யார் மீது யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது ஆனால் வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியும். வழக்கு போட்டவிபரம் விபரம் எவ்வாறு தெரியும் என்றால் வழக்கு போட்டவார்கள் சொன்னார்கள். நான் சிவகங்கை மாவட்டம் சென்று 35 ஆண்டுகள் ஆகிறது. எனது ஆதார், குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை சிவகங்கை முகவரியில் தான் உள்ளது. வைதியநாதனுக்கு சுமார் 60 வயது இருக்கும். 35 ஆண்டுகளுக்கு பின்னர் சீர்காழிக்கு அடிக்கடி வந்து செல்வேன் சொந்த வீடு வைத்தீஸ்வரன் கோயில் உள்ளது கடைசியாக சென்ற வாரம் வந்தேன். வைத்தீஸ்வரன் கோவிலில் வீடு உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செயயவில்லை. வைத்தியநாதனுக்கு டெக்ஸ்டைல் தொழில். அவர் சென்னையில் தான் தொழில் செய்கிறார். சென்னையிளல் தான் 25 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கிறார் என்றால் சரிதான். அவருக்கு 2 சகோதரர்கள் மூத்த சகோதரர் சோமசுந்தரம், இளையவர் எம்.

சுப்பிரமணியம். சோமசுந்தரம் தற்போது சென்னையில் வசிக்கிறார். சொந்த ஊர் வைத்தீஸ்வரன் கோயில். அவர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர். சுப்பிரமணியன் தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றார். சொந்த ஊர் வைத்தீஸ்வரன் கோயில், நிரந்தரமாக கும்பகோணத்தில் வசிக்கிறார். சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் எனக்கு சொந்த வீடு உள்ளது. 1980 ல் இடம் வாங்கி கட்டினேன். அதன் சர்வே எண் நினைவில்லை. வைத்தியநாதனுக்கு சகோதரிகள் இருவர் அவர்களில் ஒருவர் இறந்துவிட்டார். வாதியின் முன்னோர்கள் மாணிக்கசெட்டியார் மற்றும் மீனாட்சி சுந்தரம். அவர்கள் இறந்து 20, 30 ஆண்டுகள் ஆகிறது. எந்த வருடம் என்பது தெரியாது. இந்த வழக்கின் வாதிகளை பார்த்ததில்லை. வழக்கு விபரங்களை வைத்திநாதன் கூறினார். தாவா சொத்தின் விஸ்தீரணம், நீளம், அகலம் தெரியாது. சொத்து எப்போது யாரிடம் வாங்கப்பட்டது என்பது தெரியாது. நிரூபண வாக்குமூலம் விபரங்களை நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அவர்கள் அடித்து வைத்திருந்ததை நான் படித்து பார்த்து சரியாக இருந்தால் நான் கையெழுத்து போட்டேன். பிரதிவாதிகள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருவதற்கான ஆவணங்களை நான் பார்த்ததில்லை. இந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை. வாதிகளின் சொத்துரிமையை மறுக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். வைத்திஸ்வரன் கோயிலில் PM coffee bar உள்ள விபரம் தெரியும். அது தெற்கு வீதியில் உள்ளது. அது யாருக்கு சொந்தமானது என்பது தெரியாது. வைத்திஸ்வரன் கோயிலில் உள்ள விபரங்கள் என் தந்தைக்கு தான் முழுமையாக தெரியும். வழக்கு சொத்தில் ஓட்டுவீடு இருந்தது தற்போது இடிந்து யாரும் வசிக்க இயலாத நிலையில் உள்ளது. அதனால் அனுபவம் யாரிடம் உள்ளது என்று என்னால் கூறஇயலாது என்றால் 3 ஆண்டுகளுக்கு முன்பு தான் இடிந்தது அதற்கு முன்பு 50 ஆண்டுகளாக அவர்கள் இருந்தார்கள். அதில் நிறைய பெரிய வேப்ப மரங்கள் இருக்கிறது. அந்த வீட்டிற்கு தெற்கே தற்போது யார் உள்ளார்கள் என்பது தெரியாது. வைத்தியநாதன் எனக்கு வேண்டிய நபர் என்பதால் என் முன் விசாரணையில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.